## குளித்தலை நகராட்சி

2023ஆம் வருடம் மே மாதம் 29.ஆம் தேதி திங்கட்க்கிழமை காலை 11.00 மணிக்கு குளித்தலை நகராட்சி நகர்மன்ற கூடத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி முடிவுசெய்ய நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் தாங்கள் தவறாது கலந்துகொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

-------

**17.03.2023ஆம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்-**

பொருள்-01. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் டிசம்பர்-2022ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-02. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான சத்தியமங்கலம் நுண்ணுயிர் உரக்கிடங்கினை, 15.12.2022ஆம் தேதியன்று சேலம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்தபொழுது, மண்புழு உரம் தயாரிக்கும் பணியை முறைப்படுத்த அறிவுறுத்தினார்கள். எனவே, மண்புழு உரம் தயாரிக்கும் பணிக்கு தேவையான மன்புழு மற்றும் மாட்டு சாணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.35,000/-க்கு (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்த மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.02/2023/எச்1)

பொருள்-03. குளித்தலை நகராட்சி சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பில், தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதிசெய்திட நடப்பு ஆண்டில் (2022-2023) புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க வேண்டி உள்ளதால், இந்த வேலை சம்பந்தமாக தமிழ் முரசு நாளிதழில் 22.06.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பரம் SRESHTA Communiciations, Chennai என்ற நிறுவனத்தில் இருந்து பில் பட்டியல் வரப்பெற்றுள்ளது (தொகை ரூ.34072/-). எனவே, இந்த பில் பட்டியல் தொகை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.928/2022/பி2)

பொருள்- 04. குளித்தலை நகராட்சி சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பில், தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமுக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பு ஆண்டில் புதிய கணக்கெடுப்பு பணி நடத்தப்பட்டு உள்ளது. இதில் சாலையோர வியாபாரிகளின் அடையாள அட்டை வழங்குவதற்கு அவர்களின் குடும்ப அட்டை, ஆதார் கார்டு, புகைப்படம், வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை உறுதிசெய்து, அடையாள அட்டை Bio Metric முறையில் வழங்க கணக்கெடுப்பு பணி நடந்து வருகிறது. இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இச்செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வும், மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.846/2022/பி2)

பொருள்- 05. குளித்தலை நகராட்சியில் பொதுமக்களுக்கு தேவையான தினசரி குடிநீர் விநியோகம் செய்தல், குழாய் பைப்புகள் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்தல், கைப் பம்புகள் பராமரிப்பு, மினி சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் பராமரிப்பு, தெருவிளக்குகள் பராமரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் மேற்கண்ட பணிக்கு மூன்று நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்கள் உள்ளனர். அவர்களுடன் உதவிக்கு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். மேலு, இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. இதற்கு பகல் மற்றும் இரவு நேரங்களுக்கு காவலர் பணிக்கு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே, மேற்கண்டவாறு பணியாளர்கள் மிகவும் அவசியம் தேவைப்படுவதால், இப்பணியினை மேற்கொண்டுவரும் நிறுவனத்தின்மூலம் பணியினை ஒன்பதுமாத காலத்திற்கு (01.04.2023 முதல் 31.12.2023 வரை) மேற்கொள்ளவும், இதற்குரிய உத்தேச செலவினம் ரூ.9.00 லட்சத்திற்கும், மேற்கண்டவாறு பணியாளர்கள் (ஏழு நபர்கள்) பணியினை தொடர்ந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1066/2019/இ1)

..3..

பொருள்-06. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான ஆண்டார்மெயின்ரோட்டில் உள்ள நாளங்காடியின் தரைத்தளம் சிந்தாமணி கூட்டுறவு அங்காடிக்கும் மற்றும் முதல்தளம் தனிநபர் அலுவலக பணிக்காகவும் மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் சிதிலமடைந்து, எலிகள் தொல்லையினால் உணவுப் பொருட்கள், மின்வயர்கள் சேதமடைவதாகவும், இக்கட்டிடத்தில் உள்ள கழிவறை மற்றும் குடிநீர் தொட்டிகளை சரிசெய்து வழங்குமாறு வாடகைதாரர்கள் விண்ணப்பம் அளித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட கட்டிடத்திற்கான மின்வயர்கள், கழிவறைகள், குடிநீர் சம்பந்தமான பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.80 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.277/2023/இ1)

<u>புதிய பொருள்கள்-</u>

பொருள்-07. குளித்தலை நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களின் ஜனவரி-2023, பிப்ரவரி-2023, மார்ச்-2023 மற்றும் ஏப்ரல்-2023ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்-08. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு பணிக்கும், டெங்கு கொசு புழுக்களை ஒழிப்பதற்கும், மாவட்ட ஆட்சித் தலைவர், கரூர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி, கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் வகையில் கொசுப்புழுக்களை ஒழிப்பதற்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி 24 டெங்கு தடுப்பு பணியாளர்களை (DBC) ஸ்ரீசாய் மகளிர் சுயஉதவிக்குழு, குளித்தலை மூலம் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட குடியிருப்பு வீடுகளில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு எண்.இ1/4822/2020, நாள்-05.06.2020இன்படி, நாள் ஒன்றுக்கு ஒரு(1) நபருக்கு தினக்குகூலி ஊதியம் ரூ.362/- வழங்கவும், நகராட்சியின்மூலம் EPF செலுத்த வேண்டிய தொகை 13% கூடுதல் செலவினம் உட்பட, 2023-2024ஆம் ஆண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.25,00,000/-க்கு (ரூபாய் இருபத்து ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினம் 2023-2024ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்-09. அரசாணை(ப) எண்.121, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.நா.1) துறை, நாள்-17.01.2013 மற்றும் அரசாணை(நிலை) எண்.118, நாள்-26.09.20214-இன்படி, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருததுவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகத்திற்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், கீழ்க்கண்ட விவரப்படி 2023-2024ஆம் ஆண்டுக்கு வழங்குவதற்கும், அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,00,000/- (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**உணவு பொருட்கள் மற்றும் விநியோகம செய்யும் நிறுவனங்கள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | அரிசி | = | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக கிட்டங்கி, அய்யர்மலை |
| 2) | மளிகை பொருட்கள் | = | ஸ்ரீசித்தி வினாயகர் மகளிர் சுயஉதவிக்குழு, கீழமுதலியார்தெரு, குளித்தலை. |
| 3) | எரிவாயு உருளைகள் | = | ஸ்ரீமூகாம்பிகை கேஸ் ஏஜென்சீஸ், குளித்தலை. |
| 4) | பால் விநியோகம் | = | ஹமீதாபானு (ஆவின் பால் ஏஜென்சி நெ.A3002), குளித்தலை என்பவர் மூலம் செலவினம் மேற்கொள்ளுதல். |
| 5) | காய்கள் விநியோகம் | = | M.ஸ்ரீதரன், OMS காய்கறி கடை, குளித்தலை என்பவர்மூலம் செலவினம் மேற்கொள்ளுதல் (உழவர் சந்தை விலை அடிப்படையில்) |
| 6) | அம்மா உணவகத்தில் பணிபுரியும் "ஸ்ரீசாய்ராம் மகளிர் சுய உதவிக்குழு" பணியாளர்களின் மாத ஊதியம் மற்றும் EPF நகராட்சிமூலம் செலுத்த வேண்டிய 13% கூடுதல் செலவினம் உட்பட. | | |
| 7) | உணவு விநியோகம் செய்ய ரசீதுகள்(டோக்கன்கள்) அச்சடித்தல். | | |

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1083/2014/டி.2)

பொருள்-10. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு திடக்கழிவு மேலாண்மைத்திட்ட பணிகளுக்கு பேட்டரியில் இயங்கக்கூடிய இலகுரக வாகனங்கள் (LCV) 5 (ஐந்து) எண்ணிக்கை வாங்குவது குறித்த ஒப்பந்தப்புள்ளியினை தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு, தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து ரூ.5828/-க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. இத்தொகையினை மேற்கண்ட நாளிதழ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). செலவினத்தை 2023-2024ஆம் ஆண்டு வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| பொருள்-11. | குளித்தலை நகராட்சியில் இயங்கிவரும் கீழ்க்கண்ட வாகனங்களில் ஏற்படும் அவசர பழுதுகள் நீக்கம் செய்தல், பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல், ஆயுள் காப்பீடு புதுப்பித்தல் மற்றும் சாலை வரி செலுத்துதல் போன்ற பணிகளுக்கு 2023-2024ஆம் ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|
| 1) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 2) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |

| வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|
| 4) | TN-47- AS -5109 | ஆட்டோ |
| 5) | TN-47-X-3173 | ஈப்பு வாகனம் |
| 6) | TN-47-BU-0567 | ஈப்பு வாகனம் |

..5..

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2). இச்செலவினம் வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.469/2022/எச்1) |

| | |
|---|---|
| பொருள்-12. | குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் கீழககண்ட வாகனங்கள் மற்றும் புகைபோக்கி இயந்திரங்களுக்கு 2023-2024ஆம் ஆண்டிற்கு தேவையான எரிபொருள் K.M.V.N.பிரேம்குமார், பெட்ரோல் பங்க், குளித்தலை என்ற நிறுவனத்தின்மூலம் நேரடியாக வாங்கிகொள்வதற்கும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கும் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|
| 1) | TN-47-AS-5370 | குப்பை லாரி |
| 2) | TN-47-X-0031 | குப்பை லாரி |
| 3) | TN-47-AS-5098 | ஆட்டோ |
| 4) | TN-47-AS-5109 | ஆட்டோ |

| வ. எண். | வாகன விபரம் | |
|---|---|---|
| 5) | TN-47-X-3173 | ஈப்பு வாகனம் |
| 6) | TN-47-BU-0567 | ஈப்பு வாகனம் |
| 7) | புகைபோக்கி இயந்திரங்கள் | |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு- | 1). மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2). இச்செலவினம் வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.555/2020/எச்1) |

..6..

பொருள்- 13. குளித்தலை நகராட்சியில், கரூர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின்மூலம் கள ஆய்வு (7A of the EPF & MP Act 1952) செய்யப்பட்டதில், அம்மா உணவகத்தில் பணிபுரியும் ஸ்ரீசாய்ராம் மகளிர் சுய உதவிக்குழுவின் பணியாளர்கள் மற்றும் டெங்கு பணியாளர்களாக (DBC) பணிபுரியும் ஸ்ரீசாய் மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்கள் ஆகியோருக்கு வருங்கால வைப்பு நிதியாக மாதந்தோறும் 25% (குழுவினர்மூலம் 12% + நகராட்சியின்மூலம் 13%) செலுத்த வேண்டும் எனவும், நகராட்சியின்மூலம் செலுத்த வேண்டிய தொகை விபரத்தினை கரூர் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் கடிதத்தில்(TN/TRY/82169/EO/KARUR I&II/2023, Date:-09.03.2023) தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, கீழ்க்கண்ட விபரப்படி மேற்கண்ட மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | குழுவின் பெயர் | காலம் | சத வீதம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1) | ஸ்ரீசாய்ராம் மகளிர் சுய உதவிக்குழு, குளித்தலை. (அம்மா உணவகம்) | 05/2015 to 7/2019 | 13% | 597104.00 |
| 2) | ஸ்ரீசாய் மகளிர் சுய உதவிக்குழு, குளித்தலை. [டெங்கு பணியாளர்கள்(DBC)] | 07/2017 to 7/2019 | 13% | 524843.00 |
| | மொத்தம் | | | 1121947.00 |

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினம் 2023-2024ஆம் ஆண்டு வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1326/2017/எச்1)

பொருள்- 14. இந்நகராட்சி அலுவலக வளாகத்தின் பின்புறம் பயன்பாடற்ற பழைய இரும்பு பொருட்கள் உள்ளது. மழைகாலங்களில் மழைநீர் தேங்கி கொசு உற்பத்தியாகி தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்படும் நிலை உருவாகும் என்பதாலும், தமிழ்நாடு அரசு தலைமை அரசு செயலர் அவர்களின் உத்தரவின்படி அலுவலகத்தை தூய்மை வைத்திருக்கும் பொருட்டும், மேற்கண்ட பழைய இரும்பு பொருட்களை பொது ஏலத்தில் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.767/2023/இ1)

பொருள்- 15. குளித்தலை நகராட்சி அலுவலக கணனி அறை, பொறியாளர் அறை மற்றும் காசாளர் அறையின் குளிர் சாதன பெட்டி பழுது ஏற்பட்டுள்ளதால், அங்குள்ள கணனிகள் பழுது ஏற்படாமல் இருப்பதற்கு குளிர் சாதன பெட்டியை உடன் சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.483/2023/இ1)

பொருள்-16. குளித்தலை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 14 BOV(மின்கல வாகனம்) மூலம் குப்பைகள் சேகரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்கண்ட 14 BOVவாகனங்கள் கொள்முதல் செய்து 5 (2018-2019-ல் கொள்முதல் செய்யப்பட்டது) ஆண்டுகள் ஆகின்றது. மேலும், வாகனங்கள் பெரும்பாலானவை பழுதடைந்துள்ளதால் BOVவாகனங்களை பழுது பார்ப்பதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/-க்கு (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.706/2023/இ1)

பொருள்-17. குளித்தலை நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ், குப்பை சேகரிக்கும் பணிகளை, Service Provider / Agency /Contractor மூலம் மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.34638/2022/E!2-SWM-12, நாள்-10.01.2023ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள 27.03.2023ஆம் தேதியன்று இணையதளம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் / நிறுவனத்தின் பெயர் | தினசரி சேகரம் செய்ய வேண்டி குப்பை அளவு | ஒரு டன்னுக்கான தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சத வீதம் |
|---|---|---|---|---|---|
| 1) | The R.K.Company, Chennai. | 8.94 டன் | 4929.38 | 4879.00 | 1.02% குறைவு |
| 2) | Saram Enviro Service Pvt., Ltd., | உரிய ஆவணங்கள் இல்லை. | | | |

அலுவலக குறிப்பு- மேற்கண்டவாறு இணையதளம்மூலம் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.2ல் காணும் நிறுவனத்தார் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்காத காரணத்தால், இந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டும், வ.எண்.1ல் காணும் The R.K.Company, Perambalur நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1679/2021/எச்1)

பொருள்-18 குளித்தலை நகராட்சியின் வருவாய் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றின் 2023-2024ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.561/2023/பி1).

..8..

பொருள்-19. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் குடிநீர் குழாய்மூலாம் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இக்குடிநீர் குழாய்களில் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டு குடிநீர் கசிவு ஏற்படுவதால் குடிநீர் வீணாக்கப்படுகிறது. இதனை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியதால், இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.692/2023/இ1)

பொருள்-20. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு புழுக்களை ஒழிப்பதற்கும், கொரோனா நோய் தொற்று ஒழிப்பதற்கும் கை புகைபோக்கி(Hand Sprayer) இயந்திரம்-6 (ஆறு மட்டும்) வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு (ரூபாய் எழுபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.775/2023/எச்1)

பொருள்-21. இந்நகராட்சி தினசரி சாலையோர சுங்கம் வசூல் செய்யும் உரிமம் தொடர்பான வழக்கினை, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்யும் பொருட்டு, அவசர அவசியம் கருதி நீதிமன்ற கட்டணம், ஆவணங்கள் தயார் செய்யவும் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையின் இந்நகராட்சி நிலை வழக்கறிஞர் கட்டணம் ஆகியவைக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு (ரூபாய் எழுபது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1812/2021/அ1)

பொருள்-22. தமிழ்நாடு அரசு நிதி(படிகள்)த் துறை அரசாணை(நிலை) எண்.142,நாள்-17.05.2023ன்படி, அகவிலைப்படி 38%-லிருந்து 42%-ஆக உயர்த்தப்பட்ட (01.04.2023 முதல்) அரசாணை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.811/2023/சி1)

பொருள்-23. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ.), குளித்தலை ஊராட்சி ஒன்றியம், குளித்தலை அவர்களின் கடிதம் ந.க.அ2/2390/2022, நாள்-.....04.2023ன்மூலம், மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ2/2392/2022, நாள்-16.03.2023-ற்கிணங்க, குளித்தலை ஊராட்சி ஒன்றியக்குழு தீர்மானம் எண்.383, நாள்-13.04.2023ன்படி, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குளித்தலை ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட விபரப்படியான 4 (நான்கு) பள்ளிக் கட்டிடங்களை, குளித்தலை நகராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1) | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மாரியம்மன்கோவில், குளித்தலை. |
| 2) | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கடம்பர்கோவில், குளித்தலை. |
| 3) | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, மணத்தட்டை, குளிததலை. |
| 4) | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, தேவதானம், குளித்தலை. |

மேற்கண்ட விபரப்படியான பள்ளிக்கட்டிடங்கள் ஒப்படைக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- 1). மன்றம் பதிவு செய்யலாம்.

2). மேற்கண்ட விபரப்படியான பள்ளி கட்டிடங்களுக்கு, குளித்தலை நகராட்சி என்று பெயர்மாற்றம் செய்வதற்கும், கட்டிடங்கள் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3). செலவினத்தை இந்நகராட்சியின் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.433/2023/பி2)

பொருள்-24. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.74.00இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்குள் பணிகள் மேற்கொள்ள இயலாத காரணத்தால் Kerb wall, பேவர் பிளாக் பணி மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் கூடுதல் உத்தேச செலவினத் தொகை ரூ. 8,70,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.732/2022/இ1)

..10..

பொருள்- 25. குளித்தலை நகராட்சி பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.74.00இலட்சம் மதிப்பீட்டில் அபிவிருத்தி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்குள் பணிகள் மேற்கொள்ள இயலாத காரணத்தால் Wetmix மற்றும் தற்காலிக சுற்றுச்சுவர் பணி மேற்கொள்ள ஆகும் கூடுதல் உத்தேச செலவினத் தொகை ரூ. 6,50,000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட கூடுதல் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.732/2022/இ1)

பொருள்- 26. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 4(நான்கு) பள்ளிக்கட்டிடங்கள், குளித்தலை நகராட்சிவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில், மாரியம்மன்கோவில் நடுநிலைப்பள்ளியில் அதிகளவில் மாணவ, மாணவியர்கள் பயின்று வருவதால், போதிய இடவசதி இல்லாமல் மிகவும் சிரமப்படுகின்றார்கள். எனவே, மாணவ, மாணவியர்களின் நலன் கருதி, ரூ.20.00 லட்சம் உத்தேச மதிப்பீட்டில் முதல் தளம் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.819/2023/இ1)

*******

**குளித்தலை நகராட்சி**

**குளித்தலை நகர்மன்றத்தின் 29.05.2023ஆம் தேதிய**

**சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்**

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 156 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 157 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 158 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 159 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 160 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 161 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 162 | பதிவு செய்யப்பட்டது. |
| 8 | 8 | 163 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 164 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 165 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 166 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 167 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 168 | அனுமதிக்கப்பட்டது. |
| 14 | 14 | 169 | அனுமதிக்கப்பட்டது. |
| 15 | 15 | 170 | அனுமதிக்கப்பட்டது. |
| 16 | 16 | 171 | அனுமதிக்கப்பட்டது. |
| 17 | 17 | 172 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 18 | 18 | 173 | அனுமதிக்கப்பட்டது. |
| 19 | 19 | 174 | அனுமதிக்கப்பட்டது. |
| 20 | 20 | 175 | அனுமதிக்கப்பட்டது. |
| 21 | 21 | 176 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 22 | 22 | 177 | பதிவு செய்யப்பட்டது. |
| 23 | 23 | 178 | அனுமதிக்கப்பட்டது. |
| 24 | 24 | 179 | அனுமதிக்கப்பட்டது. |
| 25 | 25 | 180 | அனுமதிக்கப்பட்டது. |
| 26 | 26 | 181 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-P.சகுந்தலா,
நகர்மன்றத் தலைவர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல்/

ஆணையர்(பொ),
குளித்தலை நகராட்சி.